இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 96 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 29 – வெள்ளிக்கிழமை 15 நவம்பர் 2024 – கோவை ★★ 12+8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 96 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 29 - Friday 15 November 2024 - Kovai ★★ 12+8 Pages ₹ 5.00

## அரியலூர் - வாரணவாசி குழந்தைகள் மையத்தில் “ஊட்டச்சத்தை உறுதி செய்” 2-ஆம் கட்டம் தொடக்கம் !

# ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத வலிமையான தமிழ்நாட்டை ஏற்படுத்துவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - மக்கள் பிரதிநிதிகளுக்கு வேண்டுகோள் !



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 190 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 18 திருக்கோயில்களில் 25 புதிய திட்டப் பணிகள் மற்றும் 4 அலுவலகக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 42 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 15 திருக்கோயில்களில் 25 முடிவுற்ற திட்டப் பணிகள் மற்றும் 2 அலுவலகக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்ச பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர் பொ.ஜெயராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, நவ. 15 -**

**“ஊட்டச்சத்தை உறுதி செய்” திட்டத்தின் இரண்டாம் கட்டம் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர் மாவட்டம், வாரணவாசி குழந்தைகள் மையத்தில் 15.11.2024 அன்று தொடங்கி வைக்கப்படுகிறது எனவும், “ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத வலிமையான தமிழ்நாட்டை உருவாக்கிட ஒன்றிணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்” என்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

> **“ஊட்டச்சத்து குறைபாடு கண்டறியப்பட்ட குழந்தைகளின் தாய்மார்களை தமிழ்நாடு அரசுடன் இணைந்து, குடும்பத்தினரும் அதிக கவனத்துடன் பராமரிக்க, மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் முன் நின்று உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.”**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

ஏற்றமிகு தமிழ்நாட்டை உருவாக்கிட, குழந்தைகளின் கல்வி மற்றும் அவர்களின் சீரான வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றது.

**மாணவச் செல்வங்களுக்கு அரசு வழங்கும் ஊட்டச்சத்து!**

இந்தியாவிற்கு மட்டுமல்ல; உலக நாடுகளுக்கும் முன்னோடி திட்டமான முதலமைச்சர் காலை உணவு திட்டம், முட்டையுடன் கூடிய சத்துணவு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களும், இளம் சிறார்களுக்கு இணை உணவுகள் வழங்கும் திட்டம், பாலூட்டும் தாய்மார்களுக்கு மகப்பேறு உதவித்திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களுக்கும், மழலைச் செல்வங்களுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும், தமிழ்நாடு அரசால் ஊட்டச்சத்து வழங்கப்பட்டு வருகின்றது.

நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடுகளை களையும் நோக்குடன், முன்னோடி திட்டமான “ஊட்டச்சத்தை உறுதி செய்” திட்டத்தினை முதற்கட்டமாக 2022ஆம் ஆண்டு செயல்படுத்தினேன். அதன் அடிப்படையில் தீவிர ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்களாக கண்டறியப்பட்ட குழந்தைகளில் சுமார் 77.3% குழந்தைகள் இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளனர் என்ற மிகவும் மகிழ்ச்சியான செய்தியை உங்கள் எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம்!**

பிறந்தது முதல் ஆறு மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பால் மட்டுமே உணவாக வழங்கப்பட வேண்டும். ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் தாய்மார்களின் உடல் நலம் பேணினால் மட்டுமே,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.190.40 கோடி மதிப்பில்

# 29 புதிய திட்டப் பணிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

## ரூ.42.75 கோடி மதிப்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 15 -**

**இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.190.40 கோடி மதிப்பீட்டிலான 29 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.42.75 கோடி செலவிலான 27 முடிவுற்ற திட்டப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 190 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 18 திருக்கோயில்களில் 25 புதிய திட்டப் பணிகள் மற்றும் 4 அலுவலகக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 42 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 15 திருக்கோயில்களில் 25 முடிவுற்ற திட்டப் பணிகள் மற்றும் 2 அலுவலகக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்ட செயலாக்கம், 2,268 திருக்கோயில்களில் குடமுழுக்கு, திருத்தேர் களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், புதிய கல்வி நிறுவனங்கள் தொடக்கம், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து இந்து சமய அறநிலையத்துறை வாயிலாக சீரிய முறையில் செயல்படுத்தி வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## பிரியங்கா காந்தி போட்டியிடும்

# வயநாடு தொகுதியில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு!

*வயநாடு, நவ. 15 -*

*கேரள மாநிலத்தின் வயநாடு மக்களவைத் தொகுதியில் நேற்று முன்தினம் (நவ.13 - புதன் கிழமை) இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது.*

*காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்குப் பதிவு மாலை 6 மணி வரை விறுவிறுப்பாக நடைபெற்றது.*

*ராகுல் காந்தியின் சகோதரியான பிரியங்கா காந்தி முதன்முறையாகத் தேர்தலில் போட்டியிடுவதால் வாக்காளர்களிடையே ஆர்வம் காணப்பட்டது. காலையில் தொடங்கியது முதல் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.*

*ஆளும் இடதுசாரி கூட்டணி சார்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்*



*சத்யன் மொகேரி, பா.ஜ.க.வின் நவ்யா ஹரிதாஸ் ஆகியோர் பிரியங்கா காந்தியை எதிர்த்து களத்தில் உள்ளனர். அங்கு மொத்தம் 16 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.*

*வயநாடு தொகுதியில் ஏறத்தாழ 14 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.*

*2019, 2024 ஆகிய இரு தேர்தல்களிலும் வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி ஏராளமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.*

*இவ்வாண்டு வயநாடு, உத்தரப் பிரதேசத்தின் ரேபரேலி ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்ட ராகுல் காந்தி இரண்டிலும் வென்றார்.*

*தேர்தல் முடிவுகள் வெளியானதும் இரு தொகுதிகளில் வயநாடு தொகுதியைக் கைவிடுவதாக ராகுல் காந்தி அறிவித்தார். அதனைத் தொடர்ந்து இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.*

*வயநாடு மக்களவைத் தொகுதி காங்கிரஸ் கட்சியின் கோட்டை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2008ஆம் ஆண்டு அந்தத் தொகுதி உருவானது முதல் காங்கிரஸ் வேட்பாளர்களே இதுவரை அங்கு வெற்றி பெற்றுள்ளனர்.*

*இதற்கிடையே, புதன் கிழமை வாக்குப்பதிவு தொடங்குமுன் காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்கா காந்தி தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டார்.*

*அதில், “வயநாட்டில் உள்ள சகோதர, சகோதரிகளே, உங்கள் அன்புக்கும் ஆதரவிற்கும் நன்றி. நீங்கள் அனைவரும் வாக்குச்சாவடிக்குச் சென்று உங்களின் உரிமையைப் பயன்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*“உங்கள் வாக்குகள்தான் நமது ஜனநாயகத்தின் பலம். வயநாட்டின் எதிர்காலத்திற்காக கைகோர்ப்போம்,” என பிரியங்கா காந்தி குறிப்பிட்டிருந்தார்.*

## தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம்!

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம்** வருகிற 20.11.2024 - புதன்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

அதுபோது உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: கழக ஆக்கப் பணிகள்**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 600 018
நாள்- 13.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.